**செய்தி வெளியீடு எண்: 144** **நாள்: 05.03.2013**

<u>**சிறந்த ஆதிதிராவிடர் எழுத்தாளர்களுக்கு தமிழக அரசு உதவித்தொகை**</u>

தமிழக அரசின் மூலம் உருவாக்கப்பட்டுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை இலக்கிய மேம்பாட்டுப் பணிக்கான ( ADATA FOUNDATION) நிதியிலிருந்து 2012–2013– ஆம் ஆண்டிற்கான சிறந்த ஆதிதிராவிடர்/ ஆதிதிராவிடர் கிருத்துவர்/பழங்குடியினர் பிரிவைச் சார்ந்த 10 எழுத்தாளர் மற்றும் ஆதிதிராவிடர் பற்றி எழுதும் ஆதிதிராவிடர் அல்லாத ஒருவர் ஆக மொத்தம் 11 சிறந்த எழுத்தாளர்களுக்கு பரிசு வழங்கப்படும். இதற்கான நூல் வெளியிட ரூ.40,000/– வரை நிதியுதவி அளிக்கப்படும். பெயர், முகவரி, படைப்பின் பொருள், போன்ற விவரங்களுடன் விண்ணப்பிக்க வேண்டும். இது குறித்த விவரங்களை தமிழக அரசின் tn.gov.in என்ற இணையதளத்தில் (website) அறிந்து கொள்ளலாம். மேலும் அந்தந்த மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

முறையான விண்ணப்பத்துடன், படைப்புகள் எழுத்து வடிவில், விண்ணப்பதாரரின் கைபேசி எண்கள் குறிப்பிட்டு, அரசுக்கு வந்து சேர வேண்டிய கடைசி நாள் <u>**31.03.2013.**</u>

அனுப்ப வேண்டிய முகவரி

**ஆணையர்,**
**ஆதிதிராவிடர் நலம்,**
**சென்னை – 600 005**

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**